# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 13.05.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 11858/F/2024**

திரு.J.பாபு .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்/
துணைப்பதிவாளர் (வீட்டுவசதி),
துணைப்பதிவாளர் வீட்டுவசதி அலுவலகம்,
சென்னை மண்டலம்,
எண்.28, ராமநாதன் தெரு,
திநகர், சென்னை-600017. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.J.பாபு அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத்தகவல் அலுவலர் திருமதி.ஜீ.சீ.இலட்சுமி, கூட்டுறவு சார்பதிவாளர், துணைப்பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம், திநகர், சென்னை அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், தாக்கல் செய்துள்ள மனுவில் Registration of fake sale deeds in relating to Tambaram (Perungalathur) Scheme and Irregularities in Zamin Pallavaram Scheme Under RTI Act of 2005 the following information and Authenticated copy Records and Orders may please be furnished என்பன போன்ற 13 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் நாளிடப்படாத கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். மனுதாரர் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 09.07.2024 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 16.07.2024 & 29.07.2024 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இந்நிலையில் மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 19(3)ன் கீழ் 09.09.2024 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 09.12.2025 தேதியிட்ட கடிதம் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு சரியான தெளிவான தகவல் கிடைக்கவில்லை என்றும் தகவலை பெற்றுத்தருமாறும் கோரினார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் ஏற்புடையது அல்ல என்று கருதி இவ்வாணையம் கீழ்காணும் உத்தரவினை பிறப்பிக்கிறது.

**“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் கோரியுள்ள தகவல்களை உரிய நிர்வாக அலுவலரிடமிருந்து பெற்று இனம் வாரியாக சரியான முழுமையான தகவலை மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகல் ஆகியவற்றை இணைத்து அறிக்கையாக தயார் செய்து தற்போதைய பொதுதகவல் அலுவலர் 18.06.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது”.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

**<u>வழக்கு எண். SA 11858/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்/
துணைப்பதிவாளர் (வீட்டுவசதி),
துணைப்பதிவாளர் வீட்டுவசதி அலுவலகம்,
சென்னை மண்டலம்,
எண்.28, ராமநாதன் தெரு,
திநகர், சென்னை-600017.

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.பாபு,
19, 4வது மெயின் ரோடு,
ஏ.ஜி.எஸ் காலனி, வேளச்சேரி,
சென்னை-600 042.

Copy to file: KR/PA

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005